1996 ஆகஸ்ட் 20]

கங்காபுரம் மின்மோட்டாரை மாற்றுவதற்கான பணி ரூ. *14.51* செலவில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. வாவிக்கடை நீர் உந்து நிலையத்திலும் ரூ. *14.88* லட்சங்கள் செலவில் மின் மோட்டார் மாற்றும் வேலைக்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

18--

பழுதடைந்த தெரு விளக்குகளை சீர்செய்தல்

வினா எண் *437*--**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம் காசாங்காடு கிராமத்தில் தெரு விளக்குகள் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

விடை:

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த காசாங்காடு ஊராட்சியில் *255* குழல் விளக்குகளும், *2* பாதரச ஆவி விளக்குகளும் ஆக *257* தெருவிளக்குகள் உள்ளன. எரியாமல் உள்ள தெருவிளக்குகளுக்கு உதிரி பாகங்கள் மாற்றம் செய்யப்பட்டு எரியவிடப்பட்டு வருகிறது. இப்பகுதி குறைந்த மின் அழுத்தம் உள்ள பகுதியாகும். இருப்பினும் தொடர்ந்து மின் விளக்குகள் எரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

19--

கோயம்புத்தூரில் பில்லூர் குடிநீர் குழாய்கள் பதித்தல்

வினா எண் *855*--**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயம்புத்தூர் நகரில் பில்லூர் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணியை விரைவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?